TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8074739

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : Tiruvannamalai PS: V&AC Year: 2024 FIR No.: 06/2024 Date: 28.05.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.05.2024 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28 .05.2024 Time : 1600 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol - II Time : 1745 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 7 Kms South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Tiruvannamalai Municipality Office, Tiruvannamalai.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.R.Ramesh
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : S/o.V.Ramachandra ayyar
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Age-64
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (Rtd) Teacher
தொழில்
(g) Address : No.42A, Thalagiri Ayyar St, Tiruvannamalai Town , Tiruvannamalai District
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tmt.Selvarani, Revenue Inspector, Municipality Office, Tiruvannamalai .**
**2.Tr.Ragul, Revenue Assistant , Municipality Office, Tiruvannamalai.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்துஅனுப்பப்படுகிறது.</u>

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 28.05.2024 ஆம் தேதி 16.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் R.ரமேஷ், வயது-64, த/பெ.V.இராமச்சந்திர அய்யர், நெ.42A,தாளகிரி அய்யர் தெரு, திருவண்ணாமலை டவுன், திருவண்ணாமலை. செல்:8825571684. பெறுநர் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, நான் தற்போது நெ.68, வினாயகர் கோவில் தெரு, ஆலம்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என்னுடைய மனைவி பெயர் லட்சுமி ஆகும். எங்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். நான் MA., B,Sc., B.Ed படித்து அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து கடந்த 31.05.2018 -ல் பணி ஓய்வு பெற்றேன். எனது உடன்பிறந்த அண்ணன் திரு.R.ராஜேந்திரன் அவர்களும் அரசு பள்ளி ஆசிரியராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று கடந்த ஆண்டு இறந்துவிட்டார். மேற்கண்ட எனது பூர்வீக முகவரியில் எனது தகப்பனார் V.இராமச்சந்திர

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/5/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28.05.2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.05.2024, 17.55 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ...S. VELMURUGAN...
Rank: நிலை ...D.S.P.... No. எண் ...VAAC
TIRUVANNAMALAI

அய்யர், தாயார் விசாலாட்சி அவர்களின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட திருவண்ணாமலை இணை சார்பதிவாளர் -2 அலுவலக 1 புத்தகம் 378 தொகுதி 415 முதல் 430 வரை ஆகிய பக்கங்களில் பாக ஆவண எண்.3140/1983 ஆக பதியப்பட்டு பாகப்பிரிவினை செய்யப்பட்ட பட்டாவின்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வந்த மேற்படி சொத்தானது திருவண்ணாமலை நகர மையப்பகுதியான தாளகிரி அய்யர் தெருவில் நெ.42A- ல் அமைந்துள்ளது. மேற்படி சொத்தினை என்னுடைய தகப்பனார் மற்றும் தாயார் இறந்த பின்பு எனது உடன்பிறந்த அண்ணன் R.ராஜேந்திரன் மற்றும் உடன்பிறந்த 4 சகோதரிகளுடன் சேர்ந்து கடந்த 19.07.2023-ல் திருவண்ணாமலை இணை சார்பதிவாளர் -2 அலுவலக ஆவண எண்.9949/2023-ல் பாகப்பிரிவினை பத்திரம் மூலமாக எனக்கு பாத்தியப்பட்ட திருவண்ணாமலை டவுன் தாளகிரி அய்யர் தெருவில் T.S.No.794/1-ல் விஸ்தீரணம் 0.12.0 சம்மந்தப்பட்ட சொத்தும், T.S.No.793/2A -ல் விஸ்தீரணம் 0.95.0 சம்மந்தப்பட்ட சொத்தும் சேர்த்து ஆக மொத்தம் 504 சதுரஅடியில் உள்ள பழைய மதராஸ் மெத்தை வீடும் எனக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி சொத்தானது எனது தகப்பனார் இராமச்சந்திர அய்யர் அவர்களின் பெயரில் திருவண்ணாமலை நகராட்சியில் சொத்துவரி செலுத்துதலில் அவருடைய பெயர் இருப்பதால் அதை என்னுடைய பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய கடந்த 04.01.2024-ல் திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அதற்குரிய பணத்தை கட்டி விண்ணப்ப மனு அளித்திருந்தேன். இதுசம்மந்தமாக நான் பலமுறை நகராட்சி அலுவலகத்திற்கு சென்று சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்கும்போது உங்களுக்கு தொலைப்பேசியில் அழைப்பு வரும்போது வந்தால் போதும் என்று வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். இந்நிலையில் எனக்கு நேற்று 27.05.2024 -ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வருவாய் உதவியாளர் திரு.ராகுல் என்பவர் அவரது கைப்பேசி எண்.7904746036 என்ற எண்ணில் இருந்து எனது கைப்பேசி எண். 8825571684 -க்கு தொடர்பு கொண்டு உங்கள் சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக பேசவேண்டி இருப்பதால் வருவாய் ஆய்வாளர் அவர்கள் உங்களை நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு கூறியுள்ளார் என்று கூறியதின்பேரில் நான் நேற்றே திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் வருவாய் ஆய்வாளர் அவர்களிடம் சென்று சொத்துவரி பெயர் மாற்றம் சம்மந்தமாக கேட்டபோது உங்களுடைய சொத்தானது திருவண்ணாமலை நகரத்தின் மையப்பகுதியான மார்க்கெட் மதிப்பு அதிகமான தாளகிரி அய்யர் தெருவில் உள்ளதால் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ரூ.50,000/- ம் இலஞ்சமாக வேண்டும் என்று என்னிடம் கூறினார். நான் அதற்கு அவ்வளவு பணமா என்று கேட்டதற்கு அருகில்

இருந்த வருவாய் உதவியாளர் திரு.ராகுல் அவர்கள் உங்கள் சொத்து மார்கெட் மதிப்பு எவ்வளவு என்று தெரியுமா என்று சொல்லி வருவாய் ஆய்வாளர் கூறியதுபோல் ரூ.50,000/- ம் இலஞ்சம் கொடுத்தால் தான் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய முடியும் என்று கராராக கூறினார். நான் அதற்கு என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறியதற்கு முதலில் இலஞ்சமாக ரூ.40,000/- கொடுத்தால் தான் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு பரிந்துரை செய்ய முடியும் என்று இருவரும் கராராக கூறினார்கள். அதன்பின்பு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு இருவரும் இறுதியாக ரூ.30,000/- ம் இலஞ்சமாக கொடுத்தால் தான் எங்களால் சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு பரிந்துரை செய்ய முடியும் என்று கராராக சொல்லி அனுப்பிவிட்டார்கள். மேற்படி என்னிடம் இலஞ்ச பணம் ரூ.30,000/-ம் கேட்ட வருவாய் ஆய்வாளர் திருமதி.செல்வராணி மற்றும் வருவாய் உதவியாளர் திரு.ராகுல் ஆகியோர்களுக்கு இலஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய இலஞ்ச பணம் ரூ.30,000/- ம் கேட்ட அரசு அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினி மூலம் தட்டச்சு செய்த மனுவை தங்களிடம் அளிக்கிறேன். இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு,
(SdXXXXX) R.Ramesh 28/5/2024

**Sir,**

**Received the complaint on 28.05.2024 at 16.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 28.05.2024 at 17.45 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.06/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 28.05.2024. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.**

Sd/- 28.05.2024.
(S. VELMURUGAN.
Deputy Superintendent of Police, V&AC
TIRUVANNAMALAI District